# OUR LADY OF GOOD HEALTH PARISH
# தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

**131 Birchmount Road, Scarborough, ON M1N 3J7**
416-264-OLGH (6544) : **Phone**
416-264-6545 : **Fax**
office@olghtamilparish.com : **Email**
www.olghtamilparish.com : **Website**

**03/19/2021**



என் அன்பான தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களே,

உங்கள் அனைவரையும் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களும் ஆசிகளும் கூறி, இந்த அன்பு மடல் மூலம் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சியும் உவகையும் அடைகின்றேன்.

கடந்த சில மாதங்களாக, வேகமான நோய் பரவல் மற்றும் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக, ரொறன்ரோ மற்றும் பீல் பகுதிகளை ஒன்ராரியோ அரசு முடக்கநிலைக்குக் கொண்டு சென்றது. தற்போதைய முன்னேற்றகரமான சூழ்நிலை காரணமாக, இந்த முடக்கநிலை நீக்கப்பட்டு, மட்டுப்படுத்தப்பட்ட வகையில், ஆலய வழிபாடுகளை ஆரம்பிக்குமாறு, ரொறன்ரோ மறைமாவட்டமும், ஒன்ராறியோ அரசும் அனுமதி வழங்கியுள்ளன.

எனவே, இந்த வாரத்திலிருந்து எமது ஆலயம் மீண்டும் வழிபாடுகளுக்காகத் திறக்கப்படுகிறதென்ற மகிழ்ச்சியான தகவலை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். மட்டுப்படுத்தப்பட்ட வகையில், கட்டுப்பாடுகளுடன் கூடிய முறையில், ஆகக்கூடியதாக, ஆலய ஆசனங்களின் அடிப்படையில் 15 வீதமான மக்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, 50 பேர் மட்டும் ஒரு நேரத்தில் ஆலய வழிபாட்டில் கலந்து கொள்ளும் வகையில், சுகாதார பாதுகாப்புடன் ஆலயம் திறக்கப்படுகிறது. திருப்பலியில் கலந்துகொள்பவர்கள், முன்கூட்டியே இணையவழியாக முற்பதிவு செய்வது அவசியம். பதிவு செய்யாதவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஒவ்வொரு வழிபாடுகளின் பின்பும் ஆலயத்தை சுத்திகரிக்க உதவிபுரிகின்ற தன்னார்வத்தொண்டர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். உதவிசெய்ய விரும்புபவர்கள் பங்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இந்த வாரத்திலிருந்து எமது ஆலயம், பின்வரும் நேரங்களில் திருப்பலிக்காகத் திறந்திருக்கும்.

- திங்கள் முதல் வெள்ளி வரை: மதியம் 12 மணி ஆங்கிலத் திருப்பலி
- சனிக்கிழமை: மாலை 5 மணி ஆங்கிலத் திருப்பலி
- ஞாயிற்றுக்கிழமை: காலை 9 மணி ஆங்கிலத் திருப்பலி
- ஞாயிற்றுக்கிழமை: காலை 10:30 மணி தமிழ் திருப்பலி

எமது ஆலயத்திலிருந்து வலைஒளி முகநூல் இணையத்தளம் மற்றும் ஐ.பி. ரிவி ஊடாகவும், ஞாயிறு திருப்பலி, தொடர்ந்தும் பின்வரும் நேரங்களில் ஒளிபரப்பாகும்:

- ஆங்கிலத்தில்: காலை 9 மணி திருப்பலி
- தமிழில்: காலை 10:30 மணி திருப்பலி

நீங்கள் வீட்டிலிருந்தவாறே இணையவழியில திருப்பலியில் பங்குகொள்ளலாம். தற்போதைய சவாலான காலப்பகுதியிலும், தொடர்ந்தும் எமது ஆலயத்தின் வளர்ச்சிக்காகவும், நேரலை ஒளிபரப்பிற்காகவும் பல்வேறு வழிகள் மூலம் நீங்கள் வழங்கி வருகின்ற உதவிகளுக்கும் நிதிப் பங்களிப்பிற்கும் எமது மனம்நிறைந்த நன்றியும் இறை ஆசீரோடு கூடிய செபங்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். இந்த நேரலை ஒளிபரப்பிற்கு உதவ விரும்புவோர், எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். உங்களது பெயர் விபரங்கள் திருப்பலியின் முடிவில் அறிவிக்கப்படும்.

அவசர தொடர்புகளுக்கு, கிழமை நாட்களில் காலை 9 மணியிலிருந்து மதியம் 12 மணிவரை, எமது அலுவலக தொலைபேசியில் அழைத்து பேசலாம் (416-264-6544).

இறை இயேசுவின் ஆசியும் வாழ்த்துக்களும் கூறி நிற்கும்,
உங்கள் பணியாளன்,

**அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்**
**பங்குத்தந்தை, தூய ஆரோக்கிய அன்னை தமிழ்ப் பங்கு**

தொலைபேசி: 416-264-6544
மின்னஞ்சல்: office@olghtamilparish.com
இணையத்தளம்: www.olghtamilparish.com
முகநூல்: https://www.facebook.com/OLGHTamilParish
வலைஒளி: https://www.youtube.com/olghtamilparish